
மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ. இரா. கண்ணப்பர்

மலர் 10] பிரமாதீச ஹு — கார்த்திகை மலர் [இதழ் 1

[166-வது மூலிகை]

நாகலிங்க மரம்.



கார்த்திகை மலர் . 1973

விலை ரூ 1.00

உ
முருகா.

‘மூலிகை மணி’

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,


வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 மலர் விலை : ரூ. 1—00

கார்த்திகை 10-வது ஆண்டு மலரில்

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)



உ

அருள் வாக்கு

நாம் நன்றாகப் பேசுகிறோம், எழுதுகிறோம். உலகம் புகழ்ந்து மாலை போடுகிறது. இந்த மாதிரி சமயங்களில் நமக்கு அகம்பாவம் சுலபமாக வந்துவிடும். அப்போது சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அந்த புகழ்ச்சிக்கு எல்லாம் உண்மையான தகுதி நமக்கு உண்டா? எல்லாம் அம்பாளின் அனுக்கிரஹம் அல்லவா? எந்த இடத்திலிருந்து நமக்கு அந்த சக்தி எல்லாம் வந்ததோ, அந்த இடத்துக்கே நம் புகழ், நமது ஸ்தோத்திரம் அனைத்தையும் அர்ப்பணிக்கவேண்டும். அப்படி செய்வதன் மூலம் நம் அகம்பாவம் மறைந்து அன்னையின் அருள் கிடைத்து நாம் க்ஷேமத்தை அடைவோம்.

தொடரட்டும் உம்பணி!
தொலையட்டும் எம்பிணி!!

நிலை மண்டில ஆசிரியப்பா :-

குருதி கசிவது கல்லென் றெணாது
வருந்தி யூனுக் கூனே! நன்மருந்
தென்று, மொன்று மறியா வேடனும்
தன்னு ளோர்ந்த திண்ணன்; கூரிய
வம்பாற் பெயர்த்தப் பிளுன்பே ரன்பன்.
'நம்பாற் கொண்ட நன்மைத் திறத்தை
நானில மறிந்து நயக்க'; மேலொரு
கானிலம் தோய, கண்பெயர்க்க, "நில்லு!
கண்ணப்ப! நில்"! லெனக் கரைந்தா னிறைவன்.
திண்ணன் கண்ணப்ப னென்றே சிவனருட்
பெற்ற வடியாரும் போற்றிப் புகழ்ந்தார்!
நற்றமிழர் செய்தவப் பயனால் நல்லூரி,
லப்பெயர் கொண்ட வண்ணல் தோன்றிகண்
ணப்பர், சித்த ரருளிய சித்த
மருத்துவம்; செய்யு மருமை யெல்லாம்,
திருத்த முற, நமர் தெளிந்து, நலம்பெற,
நாளு மறிந்தே! யாளும் மைச்சிடம்!
தாளும் வணங்கும் தன்மையில் வேண்டி;
சித்த மருத்துவம் இத்தரை சிறக்க,
மெத்த முனைந்து மேதினியோ ரோங்க!
வயரா துழைக்கு மண்ணல்கண் ணப்பரே!
துயரது பெருகினும், தொண்டுள மருகாது;
வேண்டிய மட்டும் விரிவாய் விளங்க!
யாண்டு மியாரு மெளிதிற் பயன்பெற,
வும்பணி யுலகி லேழை யெளியோர்,
வெம்பிணி நீக்கி! வேதனை யறுப்பீர்!
நன்னிலை யடைந்த நாட்டு மாந்தரும்,
'என்னப்பர் வேலூர் கண்ணப்ப' ரென்னும்
சொன்னிலைய, சோதனை யறவே,பத் தாமாண்டும்
தொடரட்டு மும்பணி! தொலையட்டு மெம்பிணியே!

○ ○ ○

[புலவர், ப. க. வேலு, பழையசீவரம்]

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10]   பிரமாதீச ஹு — கார்த்திகை மீ நவ-73   [இதழ் 1

நல் வாழ்த்துக்கள்!

மூலிகை மணிக்கு பத்தாவது ஆண்டு துவங்கிவிட்டது. இந்தப் பத்து ஆண்டுகளில் தமிழக மக்களின் உள்ளத்திலே எவ்வளவோ மாறுதல்களை செய்து விட்டது! பசுமை புரட்சி என்றால் மருத்துவத் துறையில் எளிய மூலிகை களின் பயன்களை பட விளக்கங்களுடன் தந்து விமரிசனம் செய்ததில் அனுபவத்தில் உணர்ந்து பயன் அடைந்த மக்கள் பல்லாயிரக் கணக்கானோர் ஆவர். இவர்கள் எல்லாம் ஆங்கில மருந்துகளின் ஆரவாரங்களில் மயங்கி, உடல் நலம் கெட்ட பின்பு வந்தவர்கள். எல்லாம் மூலிகையின் அளப்பரிய பயன்களைக் கண்டு, பயன்படுத்தி பூரண நலன் அடைந்தவர்கள். இவர்கள் எல்லாம் இன்று மூலிகை மணியின் அன்பர்கள் ஆகி, பத்தாமாண்டு தொடக்கத்திலே அவர்களின் இதயத்தைப் பிளந்து அன்பைக் காட்டி, நமது பணி மேன்மேலும் சிறப்புற்று ஓங்க நல் வாழ்த்துக்களை நல்கியுள்ளனர். வாழ்த்துரைகள், கவிதை, கட்டுரை, பாடல்கள் வரைந்து அனுப்பிய அன்பர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றி கலந்த வணக்கங்கள் உரித்தாகுக!

காகிதப் பற்றுக்குறை உச்ச கட்டத்தை அடைந்த இந்த நேரத்திலே எதையும் அச்சு செய்ய முடியாமல் தவிக்கிறோம் என்றாலும், இந்த கார்த்திகை மலரும்—அநுபந்த வெளியீடு உள்பட 100-பக்கத்தை எட்டிவிட்டதற்கு வாசக அன்பர்கள் மகிழ்ச்சி தான் அடைவார்கள். தமிழ் மருத்துவம் வளர்ச்சியடைய பாடுபட்டு வரும் பெரியோர்கட்கு எல்லாம், குறிப்பாக, திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், கோவை மருத்துவ மேதை, திரு. ஜி. டி. நாயுடு போன்றவர்கட்கெல்லாம் எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் !!

அமைச்சர் அன்பழகர் அவர்களின் கவனத்திற்கு!

நீ[illegible] உலகில் நடமாடும் ஊசி மருந்துகள், மாத்திரைகள் பற்றி வர வர, அவை போடும் ஆட்டம் பாட்டங்கள், அடிக்கும் கொட்டங்கள் எல்லாம் இன்று உச்ச கட்டத்திற்கு வந்துள்ளன என்பதை நாள் ஏடு, வார ஏடுகள் மக்களிடையே எடுத்துக் காட்டி வருகின்றன. எடுத்துக் காட்டாக அண்மையில் செய்தித் தாளில் வந்தது; கீழ்வருமாறு:—

'தின மணி' வியாழக்கிழமை நவ. 15, 1973. பக். 3

> "பெனிசிலின் ஊசி போடப்பட்ட நோயாளி சாவு"
>
> சென்னை, நவ-13. சைதாப்பேட்டை, E.S.I. ஆஸ்பத்திரியில் ஒரு பெனிசிலின் ஊசி போட்ட சிறிது நேரத்தில், மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்த சையத் காதர் இன்று இறந்து விட்டார். கிண்டியில் உள்ள டான்சி எனாமல் வயர் தொழிற் சாலையைச் சேர்ந்த தொழிலாளி அவர். ஆஸ்பத்திரியில் பெனிசிலின் ஊசி போட்ட உடனேயே, "ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது" என்று சொன்னார். உடனே அவர் கீழே விழுந்து விட்டார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப் பட்டது; ஆனால் பயனில்லை! பம்பாயில் உள்ள ஒரு பெரிய கம்பெனியில் உற்பத்தியான 'பெனிசிலின்' இது என்று தெரிகிறது. அவருக்கு போட்டது போக மீதமிருந்த (2 வயால்) பெனிசிலினும், ஆஸ்பத்திரியில் இருந்த பெனிசிலின் இருப்பும் உடனே கிண்டி ஆராய்ச்சி நிலையத்துக்கு அனுப்பப்பட்டது.

இந்தச் செய்தியில் செத்தவனைப் பற்றி யாரும் அக்கரைப்பட்டதாகத் தெரியவில்லை. இது போன்ற செய்திகள் அடிக்கடி வர ஆரம்பித்து விட்டன என்ற செய்தி, அமைச்சர் அன்பழகர் கவனத்திற்கு கொண்டு வரத்தான் செய்து இருப்பார்கள். இதற்கு அறிக்கைகள் விட்டால் மட்டும் போதாது. மருந்துகளுக்குத் தடை விதித்து விற்பனையைக் கட்டுப்படுத்தினால் மட்டும் போதாது. இறந்த உயிருக்கு யார் பொறுப்பு? அவர்களுக்கு உரிய தண்டனையை சட்டப்படி கொடுப்பது, மக்கள் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டவேண்டும்.

இத்தகைய சாவுக்கு யார் காரணம் என்பதை சட்டபூர்வமாக விசாரணை செய்து தகுந்த தண்டனை அளிப்பது அரசின் தலையாய பொறுப்பாகும். இப்படிச் செய்வதன் மூலம் தான், அடிக்கடி நிகழும் இம்மாதிரியான பொறுப்பற்ற சம்பவங்களை தடுக்க முடியும். எனவே, நலத்துறை அமைச்சர் அவர்கள் மேலான கவனத்திற்கு எமது வாசக அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இதை உணர்த்தப படுகிறது.



'நாகலிங்க மரம்'

(166-வது மூலிகை)

மர வகுப்பு இனங்களில் நாகலிங்க மரமும் ஓர் சிறப்பானது என்று அநேகருக்குத் தெரியாது. ஆமாம்! ஊசி மருந்துகளின் பெயர்கள் தெரிந்த அளவு, இயற்கையின் தாவர வளர்ச்சியின் பெயர்களை மறந்தே போனார்கள். காலத்தின் கோலம் இன்று அந்த நாகரீக ஊசி மருந்துகளே மனிதனை விரைந்து கொல்லுவதாக செய்திகள் வருகின்றன. நம் நாடு செய்த பாக்கியம் காந்தி அடிகளால் வெள்ளையன் வெளியேறினான். ஆனால், நாம் செய்த துர்பாக்கியம் — ஆங்கில மருந்துகள் நம்மை அடிமையாக்கி ஆளுகிறதே! அதனால் தான், இந்த இழிநிலை போக்க மூலிகைகளைப் பற்றி எழுதுகிறேன். ஊன்றி கவனிப்பவர்கள் நிச்சயம் நலம் பெறத்தான் செய்கின்றனர். அந்நிய மருந்தை அடியோடு வெறுத்துத் தள்ளுகின்றனர். இப்படி எனது பல்லாண்டு காலப் பணியால் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் மூலிகை மருத்துவ சிகிச்சையில் நம்பி வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விட்டனர் என்றால் இது மிகையல்ல!

இந்தப் பத்தாவது ஆண்டு சிறப்பு மலருக்கு நாகலிங்க மரம் அமைந்தது மிக பொருத்தமாகும்.

ஏனென்ருல் இது தெய்வீகத் தொடர்புள்ள மூலிகை. சிவபெருமான் எழுந்தருளியுள்ள புராதன கோயில்கள், பாடல் பெற்றுள்ள சிவாலயங்களில் இம் மரத்தைக் காணலாம். வாஞேங்கி இருக்கும் இதன் கிளைகள். இதிலிருந்து ஆலமர விழுது போல, பசுமையான கொடிகள் கீழே தொங்கும். சிறு கிளைகளின் இடையே மலர் கொத்து காய்த்து மொட்டுகள் நிறம்பி இருக்கும்.

இதன் பூத்த மலரைக் காணும்போதும் நமக்கு பேராச்சர்யமாக இருக்கும். ஆயிரம் தலையுடைய ஆதிசேஷன் என்ற நாகம் குடை பிடிப்பது போலவும், தாமரை இதழ் போல் ஆறு இதழ்கள் கொண்ட மலரின் நடுவிலே சர்வேச்வரனுகிய சிவபெருமான் லிங்க வடிவிலே வீற்றிருப்பது போல், தத்ருபமாக காட்சியளிக்கும். இந்த நாகலிங்க மலரைக் காணும் நாஸ்திக அன்பர்கள் கூட மெய்சிலிர்ப்பர் என்ருல் ஆஸ்திக மனம் உடையவர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும். இந்த மரத்திற்கு வழக்குப் பெயராக நாகலிங்க மரம் என்று தான் கூறுவர். இந்த மலருக்கு நாகபுட்பம் என்பர். மிகுந்த வாசனையுள்ள மலர். சிவாலயங்களில் இந்த மலரை அர்ச்சனைக்குரியதாக்கி அழகுபடுத்துவர்.

நாம் எத்தனையோ வித மலரும் கண்டிருக்கிருேம். ஆனால் இந்த நாகபுட்பத்தைக் காணும்போது, நம்மை அறியாமலே ஓர் விதமானச் சலனம் ஏற்படுவது புலனுகும். திறமையுடைய சிற்பிகளானுலும் சரி, பெரிய விஞ்ஞான மேதையானுலும் சரி, இயற்கையின் படைப்பிலே இப்படியும் ஓர் மலர் உண்டா? என்பதை சிந்தனை செய்து ஆச்சர்யப்பட்டு, இந்த நாகலிங்க ஈஸ்வரனை மனதால் ஒரு நிமிடம் அஞ்சலி செய்யாமல் இருக்க முடியாது என்பதை திண்ணமாக கூறிவிடலாம்.

இந்த மரம் இந்தியாவுக்கே உரியது; இமயம் முதல் குமரி வரை காணக்கிடைக்கும். இம்மரத்தை பிறகு பர்மாவிலும் பயிராக்கியுள்ளதாக தெரிகிறது. எனினும் நாகலிங்க மரம் தென்னுட்டிற்கே உரியது என்ருல் மிகையல்ல! ஏனெனில், சிவபெருமானை இறைவனுகக் கொண்ட தமிழகத்தில் சைவ சமயத்தவர்கள் ஆலயந்தோறும் இந்த நாகலிங்க மரத்தை தல விருட்சம் ஆக்கிக் கொண்டதில் வியப்பில்லை. மற்ற சமயத்தவர்கட்கு இம் மலர் பற்றி கவர்ச்சி இருக்குமோ, இருக்காதோ, ஆனுல் சைவ சமயத்தவர்கள், இம் மலரைக் கரத்தில் ஏந்திக்கொண்டு, "தென்னுடுடைய சிவனே போற்றி, என்னுட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று கண்களிலும், இதயத்திலும் இந்த நறுமணமுள்ள மலரை ஒற்றிக் கொள்ளுவர். இத்தகைய ஓர் மகிமை இந்த மலருக்கு உண்டு.

இனி இந்த மரத்தின் மருத்துவப் பயனை கவனிப்போம். பொதுவாக இதன் பூவின் செய்கை மிகவும் சிறப்பானது. அதாவது அகத்தில் (உடம்பில்) உள்ள அபரிமிதமான வாய்வை அகற்றி, மித வாய்வு தரும். அளவுடன் பசியை உண்டாக்கும். உடல் சூட்டை அதிகரித்து, அதிகமான சூட்டையும் தணிக்கச் செய்யும். அத்துடன் உடல் உரமாக்கவும், பலகாரி (பலத்தை உண்டு செய்யும்) சக்தியாகவும் வேலை செய்யக் கூடியது. (குறிப்பு:—அதனால் தான் இந்தப் பூவை யார் கண்டாலும் ஒருவித மனோசக்தியைத் தூண்டி அவர்களை எல்லாம் பயமுற செய்கிறது.)

காய் குணம்

காயை உடைத்து அதனை வாசனையாக முகரச்செய்தாலும், அதனை உள்ளுக்கு பயன் படுத்தினாலும் மண மூட்டியாக (வாசனை திரவியமாக) பயன் படுகிறது. இதன் காயை இந்த மாத முகப்பு, அட்டை படத்தில் நீங்கள் கண்டிருக்கலாம். அதுமட்டுமல்ல, இதன் காயைத் தின்றவர்களுக்கு நாவில் காரல் உண்டாக்கும், அதன்பிறகு மலச்சிக்கலை உடைத்து பேதியை உண்டாக்கும். இந்த பேதியில் உடம்பில் உள்ள கெட்ட நீர்கள் எல்லாம் பேதியில் வெளியாகிவிடும்.

பட்டை

பட்டை துவர்ப்பிச் செய்கையை உண்டு பண்ணும்.

வேர் பட்டை

இந்த நாகலிங்க மர வேர்பட்டை துவர்ப்பிச் செய்கையை உண்டாக்கி, வியர்வையை பெருக்கச் செய்யும் குணமுடையதாகும். ஆக, இதன் இலை, மொட்டு, பூ, பட்டை, வேர்பட்டை, காய், விதை ஆக சமூலங்களும் ஏழு வித மரத்தின் உபயோகங்களாக பயனாகிறது.

இலையின் பயன்கள்

சீதள நோய்கள் விலக: நாகலிங்க மரத்தின் இலையை அரைத்து தலையில் அப்பி வைத்து இருக்க ஜன்னிக் கோளாறு, தலை பாரம் நீரேற்றம் முதலியன நீங்கும்.

தீப்பட்ட ரணம் கொப்புளம்

இலையை அரைத்து அத்துடன் பசு வெண்ணை கலந்து போட, புண் எரிச்சல் இன்றி ஆறும்.

கால் பாதம் விரல்கள் இசிவு நீங்க

இலையைக் குடிநீர் காய்ச்சி காலை, மாலை ஒரு குவளை விதம் குடித்துவர நீங்கும்.

மொட்டு

பூக்காத மொட்டுகளை எடுத்து அரைத்து சர்க்கரைப்பாகு செய்து அதில் கலந்து வைத்துக்கொண்டு உள்ளுக்கு கொடுத்துவர ரத்தபேதி, சீதபேதி ஆகியவைகள் நீங்கும்.

நாகலிங்கப் பூவின் பயன்கள்

இந்த அற்புத மலர் உலர்ந்தாலும் மணம் மாறாமல் இருப்பதால், சித்த மருத்துவ முறையில் கலவைப் பொடிகள், இளகல், தைலம் ஆகிய வைகளில் சேர்த்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மூல நோய்கட்கு

பச்சையாகப் பூவை எடுத்து சம அளவு வெண்ணை, கற்கண்டு கூட்டி அரைத்து காலை, மாலை சாப்பிட்டு வர ரத்த மூலம் குணமாகும்.

(தொடரும்)

இதய ஒலி!

கோ. சிவராமன், 18—10—73

காமன்கோட்டை.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

கடவுளின் கண்ணிலே இரத்தம் வருகிறதே என்று கலங்கி தேர்ந்து தெளிந்து தன் கண்களையே அம்பினால் குத்தி எடுத்து காளத்திய நாதனுக்கு கண்ணிலே அப்பியதால் தானே, காளத்திய நாதனே நேரில் தோன்றி "கண்ணப்பா மறு கண்ணையும் பிடுங்காதே! நில்" என்றார். கடவுளுக்கு கண் கொடுத்ததால் தானே, கண்ணப்பர் ஆகி பின் மனிதர்கள் எல்லோரும் வணங்கும் தெய்வமாக விளங்கி நின்றார். என்றும் மறையாத பெயரை பெற்றார் என்றால், பெருமதிப்பிற்குரிய மேன்மை தங்கிய உயர்திரு மூலிகை மணி ஆசிரியர் (A. R. கண்ணப்பர், R. M. P.) அவருடைய இதய சுத்தியோடு செய்யும் மருத்துவச் சேவையால் எத்தனையோ ஆயிரக்கணக்கானோர் எளிதாக பயன் அடைய, ஏழை மக்கள் எளிதாக மருத்துவத்தைப் புரிந்து வாழ்வில் நோய் நொடி அற்ற தன்மையுடன் விளங்க, ஏழை மக்களின் இதயக்கண்ணாக விளங்குவதால் தானோ "கண்ணப்பர்" என்று பெயர் பெற்றீரோ?

வாழ்க உங்களது பணி! வளர்க உங்களது புகழ்!!

அன்புள்ள, கோ. சிவராமன்.

Dr. I. மாசிலாமணி, R.I.M.P. 30—10—73

மனோகர் மருத்துவ மனை, (பூண்டி வழி) கோவிலூர் P.O.

தஞ்சாவூர் Dt.

ஐயா, தாங்கள் மூலிகை மணிக்கு ஆசிரியராய் இருப்பது போல், மூலிகை மணி என்போன்ற வாசக நேயர்களுக்கு தலைமை ஆசிரியாக இருக்கிறது. ஏட்டளவில் இருந்த மூலிகைகளெல்லாம் வீட்டளவிலும், நாட்டளவிலும், மேனாட்டளவிலும் வளர்ச்சி பெறுவதற்கு விளக்கப் படங்கள் பெரிதும் துணை புரிகின்றன.

இப்படிக்கு, Dr. I. மாசிலாமணி.

M. P. ராஜகோபால், 2—11—73

கல்பட்டு B. O. காணை S. O.

உயர்திரு. சித்த மருத்துவர் கண்ணப்பர் அவர்களுக்கு, வணக்கம் பல.

மூலிகை மணியை விருப்பமுடன் வாங்கிப் படிக்கும்படி நேர்ந்தது. இதுவரை இத்தகைய விவரங்களை நான் அறிந்ததில்லை. நம் தோட்டங்களிலும், கொல்லை—கழனி வெளிகளிலும் இன்னும் அங்கும், இங்கும் என்றில்லாமல், எங்கும் இயற்கையிலேயே ஆண்டவன் அளித்துள்ள மூலிகைகளை நாம் மறந்து உடலையும், உள்ளத்தையும் கெடுக்கும் ஊசி, மாத்திரைகளை நாடுகிறோம் என்று நினைத்தால் மிகவும் வேதனையாகவும், வெட்கமாகவும் உள்ளது.

எம். பி. ராஜகோபால்.

மணி மொழிகள்!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே!

கற்பதும் கேட்பதும் இறைவனை யடைவதற்கே. கல்வியின் பயன் அதுவே; பட்டம் பெறுவதற்கென்றும், சிறந்த அறிவாளி என்று பிறர் மெச்சுவதற்கென்றும், கூட்டத்தில் நின்று மொழிக்குமொழி தித்திக்க இனிமையாகவும் சதுரப்பாடாகவும் பேசுவதற்கென்றும் படிக்காதே.

கல்வியின் பயன் கடவுளை யறிதல்.

நீ இரவில் படுக்கும்போது, "நாம் இன்று காலை கண் விழித்து எழுந்தது முதல், இப்போது கண்ணுறங்கப் படுக்கும் வரை என்னென்ன நல்லவை கற்றறிந்தோம்? நம்மால் இன்று பிறருக்கு என்ன பயன் உண்டாயிற்று? மனத்தாலே, வாக்காலே, காயத்தாலே நாம் இன்று செய்த நலங்கள் யாவை?" என்று எண்ணு.

ஒரு வியாபாரி கடையை மூடும்போது, வரவு, செலவு பார்த்து இருப்புத் திட்டம் கட்டுவதுபோல், நீ கண்ணை மூடி உறங்குமுன், நீ செய்த புண்ணிய பாவங்களை நினைத்துப் பார்த்து, புண்ணியந்தான் இருப்புத் திட்டம் எனக்கொள்.

இரவில் தூக்கம் வந்தாலொழியப் படுக்கையில் படுக்காதே

அவ்வாறு படுத்தாலும் நெடுநேரம் வரை தூக்கம் வராமல் புரண்டுகொண்டு பலப்பல தீய நினைவுகளும், ஆசைகளும் உண்டாகச் செய்யும். தூக்கம் வராதபோது அறநூல்களைப்படி, தூக்கம் வந்தவுடன் படுத்து உறங்கு.

காலையில் விழிப்பு வந்தவுடன் எழுந்துவிடு. சோம்பலாக விழித்துக்கொண்டு படுக்கையில் படுத்துப் புரளாதே.

நூல் தட்டிக் கோணலை நீக்கிய மரங்கள் மாளிகைகளிலும் கோயில்களிலும் நிலையில் —சட்டத்தில் திகழ்ந்து எண்ணெய்ப் பூசி பளப்பளப்புடன் இருக்கும். அதுபோல், நீதி நூல்களைத் தட்டி மனத்தின் கோணலை நீக்கிய மனிதர்கள் உயர்ந்த பதவியில் அமர்ந்து, பல்லோராலும் மதிக்கப் பெறுவர்.

நூல் தட்டிக் கோணல் நீக்கப் பெறாதவைதான் விறகுத் தொட்டியில் வெய்யிலில் கிடந்து மழையில் நனைந்து அடுப்பில் எரிக்கப்படும். அதுபோல், அறநூல்களுடன் பழகாதவர், பலராலும் பழிக்கப்பட்டு தாழ்வடைவர்.

முத்தமிழ்க் காவலர்

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின்

75-ம் ஆண்டு நிறைவு

முத்து விழா.

கடந்த 1973 நவம்பர் 10 சனிக்கிழமை முதல் 25-ம் நாள் ஞாயிறு முடிய 16 நாட்களும் திருச்சியில் இவ் விழா அதி விமரிசையாக நடைபெற்றது.

சென்னை, மதுரை, கோவை, அண்ணாமலைநகர் ஆகிய தமிழகத்தில் உள்ள நான்கு பல்கலைக் கழக துணைவேந்தர்களும் பங்கு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கவை. மேலும், கடைச்சங்க காலத்தே போன்று நமது தமிழக புலவர் சங்க பெருமக்கள் 49 பேர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவர் எழுதிய நூல் தமிழின் சிறப்பு-16 தமிழ் பேறு 16, அவர் வெளியிட்டுள்ள நூல்-16 முத்து விழா நடந்த நாட்கள்-16 அவை நடந்த இடங்கள்-16 நடத்திய அன்பர்கள்-16 துறையில் உள்ளவர்கள். எப்படி இதன் சிறப்பு!

எனவே இவ் விழாவின் பெருமையை எடுத்துரைக்க தற்கால காகித பற்றாக்குறையால் இத்துடன் நிறுத்திக் கொண்டு; திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் முத்து விழா தமிழுக்கே எடுத்த மாபெரும் விழா! என நினைக்கத் தோன்றுகிறது. மேலும் பல்லாண்டு முத்தமிழ்க் காவலர் வாழ்ந்து, தமிழுலகம் வளர தமிழ் மக்களுக்கு நல வழிகாட்டியாக இருக்க வேண்டி எல்லாம் வல்ல தமிழ்க் கடவுள் திருமுருகன் அருள்புரிவாராக!

இப் பெரும் விழாவில், நமது நண்பர், திருமிகு ம. சஞ்சீவி (தமிழ்த் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்) அவர்களின் செயலாற்றல் மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும்.

மூலிகை மணி வாசகர்கள் சார்பில்,

அன்படிமை,

ஆ. இரா. கண்ணப்பர்.

— முன் மாதத் தொடர்ச்சி

பல் வலிகள் நீங்க

(1) தாளிச பத்திரியை உலர்த்தி தூள் செய்து பற்களில் தேய்க்க பல்வலி நீங்கும்.

(2) சூரத் நிலாவிரையை உலர்த்தி இடித்து தூள் செய்து பற்களில் தேய்க்க சகலவித பற்கள் வலி நீங்கும்.

(3) பயோரியா என்ற பல்லரணை நீங்க, துவரைச் செடியின் இலை 1 கைபிடி, வசம்பு 1, நிலமுருங்கை விதை 5-கிராம் சேர்த்து, வெந்நீர் விட்டு அரைத்து சுண்டையளவு மாத்திரைகள் செய்து காய வைத்துக்கொண்டு அதை மீண்டும் வெந்நீரில் உரைத்து பற்களின் ஈறுகளில் தீட்டி வந்தால் பல்வலி, பல்லரணை, ஈறு வளருதல் ஈறு தேய்தல், கரைதல் போன்ற எல்லாவித பல் நோய்களும் நீங்கிப் போகும்.

(4) ஈறுகள் வீங்கி ரத்தம் கட்டியிருத்தல், தொண்டைக் கட்டி குரல் கம்மிபோன பல் நோய்களில் காசுக்கட்டியை வாயில் போட்டு அடக்கி வைத்து, மென்னுவதால் நீங்கும்.

(5) ஈறுகள் எப்போதும் வீங்கி ரத்தம் கசிந்துவரும் சிரித்தாலும் ரத்தம் வரும் நோய்களில், நன்னாரி வேர் பச்சையாக எடுத்து அரைத்து, தினமும் காலை நேரம் கொட்டைப் பாக்களவு பாலில் கலந்து 5-நாள் சாப்பிட, ரத்தம் வருவது நிற்கும்.

கல்நார் பற்பொடி செய்யும் முறை

(6) வருத்த கல்நார் வருத்த உப்பு, பொறித்த படிகாரம், இலுப்பை கட்டி, கடுக்காய் கொட்டைப்பாக்கு கருவேலன்பட்டை இவைகள் வகைக்கு 50 கிராம் லவங்கம் 5 கிராம் யாவும் இடித்து தூள் செய்து வைத்துக்கொண்டு, நாள்தோறும் காலை பல் துலக்கி வந்தால் பல் அசைவு சொத்தப்பல், பற்களில் புழு, வாய் நாற்றம், ஈறு வளருதல் பல்லில் சீழ் ரத்தம் வருதல் மற்றும் பல் தொல்லைகள் யாவும் நீங்கி, பற்கள் பளபளப்பாகும்.

(தொடரும்)

'மூப்பூ' பற்றிய விவாத அரங்கம்

[A. K. கோவிந்தராசன், கல்லாவி, தர்மபுரி மாவட்டம்]

தமிழகச் சித்தர்கள் அளித்த முப்பூவுக்கு புலவர் பொ. முனியப்பன் விளக்கங்களை நோக்கினால் சேற்றை குழப்புவது போல் உள்ளது. தாம் படித்த புலவர் தமிழுக்குப் பொருள் கண்டுக் கொள்வது வேறு. சித்தர்கள் கூறும் தமிழுக்கு பொருள்கள் கண்டுக் கொள்ளுவது வேறு.

சித்தர்கள் தமிழ் ஆங்காங்கு பரிபாஷையில் அமைந்ததை நாம் படித்தால் அதில் ஒன்றும் சுவையிருப்பதாகத் தெரியாது. ஆனால் சித்தர் நூல்களை ஆழ்ந்து ஊன்றி உன்னிப்பாக மிக நிதானமாக விழிப்பான கவனத்துடன் படித்தால் தான் அதன் உள்ளே பொதிந்துள்ள ஞானக் கருப் பொருள்களை உணரமுடியும்.

வயிற்றுப் பிழைப்புக்கு படிக்கும் புலவர் பட்டத்தை வைத்துக் கொண்டு, முப்பூ கட்டுரை எழுதினால், அதனைக் கையாளுபவர்களுக்கு தோல்வித் தான் கிடைக்கும். செல்வம் இழக்க நேரும். இவர் கூறும் மருத்துவ முப்பிலிருந்து, தாம் சரியாக அதில் பொதிந்துள்ள பரிபாஷை பொருள் புரிந்துக் கொள்ளவில்லை யென்று அவரது கட்டுரையின் வாயிலாக புலனாகிறது. எப்படியெனில், "எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்; பொருள் தெரியாதவன் எல்லாம் கெடுத்தான்" — என்ற நிலைக்கு, படிக்கிறவர்களும், அதனை செய்ய புகும் வாசகர்கள் மேற்கண்ட கதிக்கு உள்ளாக நேருவார்கள்.

"தொட்டு காட்டாத வித்தைச் சுட்டுப் போட்டாலும் வராது"— என்ற பழமொழிக்கு ஏற்ப மேற்படியாரின் கட்டுரை அமைந்துள்ளது. வாதம் கெட்டால் வைத்தியன் ஆவான்; ஆனால் வைத்தியன் கெட்டால் பைத்தியம தான் பிடிக்கும்.

உபாசனை

தமக்கு அல்லது தமது குருவால் உபதேசிக்கப்பட்டு, அதன் உதவி கொண்டு தொழிலில் இறங்கலாம். இது இன்ன உபாசனைக்குத் தான் கட்டுப்படும் என்ற நிபந்தனை கிடையாது. சிவன்-சக்தி-முருகன்-விநாயகர்-அனுமார் இன்னும் பல உண்டு. ஏதாவது ஒரு உபாசனைக் கொண்டு முப்பூ முடிக்கலாம்.

மூவகை முப்பூ குறிப்பு

யோகி முப்பூ :— இரேசகம் + பூரகம் = கும்பகம் இதனால் விந்தை (உப்பு சத்தை) கடைதல் — அதிலுள்ள குற்றம் கசிவு நீங்கும். அதனை விணாக் தண்டூடே கபாலத்திற்கு கொண்டுச் செல்லுதல். அதனால் முகுள முதல் பெருமூளை நாகத் தாமரைப் போல் மலருதல் — விந்து மணியாதல் அம் மலரிலிருந்து தேன் என்னும் அமுதம் பொழிதல் - அவ்வமுதமே நாதவிந்துடன் ஒன்றுபட்டு பேச்சற்ற நிலை இயங்கி முப்பூவுக்கு சமமான இளநீ நுங்கு போன்ற அமுதம் இறங்கும். அதனைப் பருக பருக கல்ப தேகம் பெறுதல். இதனால் பத்தரை மாற்றுப் பசும் பொன் தேகம் பெற்று ஆடாத ஆட்டமெல்லாம் ஆடலாம்.

மந்திர முப்பூ —தாய் தந்தையர்கள் இருவரும் தலைப்பிரசவமானவர்களாக இருத்தல் — அவர்களுக்கு பிறக்கும் தலை பிரசவத்தின் ஆண் மகனின் கபாலம் முதல் எலும்பு நாகவும் தலைமஞ்சங் கொடியும் — சுத்தி முறையில் தெளிந்த சுண்ண நீரில் பூநீறு கலந்து தெளிந்த நீரில் மேற் கண்டவை போட்டு சுண்டக் காய்ச்சி அலம்பி எடுத்துக் கொள்ளுதல் — தலைமஞ்சங் கொடி உலர்த்தி தூள் செய்து அரவையில் சேர்த்தல். அரவைக்கு " அட்ட கரும மூலிகைச் சாறு சேர்த்தல் "- முப்பூ சுண்ணம் சேர்த்தல். புடமிடல், அங்வவ் வேலைக்கு சேர்த்து வேதையாடல்.

மருத்துவ முப்பூ :-ஆதியுப்பு + அனுதியுப்பு + சமாதியுப்பு = முப்பூ.

1. ஆதியுப்பு = இந்துப்பு—துண்டக்கல்—கல்லுப்பு—அத்த விபூதி என்று பரிபாஷை.

2. அனுதியுப்பு = கடலுப்பு — பச்சையுப்பு — சோற்றுப்பு — பாறையுப்பு என்று பரிபாஷை. இதன் கைப்பு சுவையும், கசிவுத் தன்மையும் நீக்கி தீட்சை செய்தல்.

3. சமாதியுப்பு = நிலவுப்பு — பூநீர் — ஊசரம் — இதன் எண்ணெயை நீக்கி தீட்சை செய்தல்.

மேற்கண்ட மூன்றையும் முறைப்படி தீட்சை செய்தப் பின் சுத்தக் கங்கை என்னும் நடுவிந்து நீரால் அரைத்து பஞ்சசுன்ன முகையிலிட்டு ஊத. முப்பு சுன்னம் முடியும். இதில் வாத முப்பு — வைத்திய முப்பு உண்டு. சாபநிவர்த்தி செய்தல் அவசியம்.

ஆதியுப்புக்கு கடையில் விற்கும் வேடியுப்பு பயன்படுத்தினால் முப்பு முடியாது.

அனுதியுப்புக்கு கடல்நுரை உபயோகத்தால் நலம் தராது.

இம் மாதிரி மூவகை முப்பைக் கண்டவர் அடையும் பலன் கீழ்க் கண்ட பாடலால் அறியலாம்.

" முப்பைக் கண்டார் முப்பை யகன்றார்
முப்பைக் கண்டார் மெய்வினை யற்றார்
முப்பைக் கண்டார் மோகத முற்றார்
முப்பைக் கண்டார் மொழிபவருமே " — நந்திஞானம்

திரு முனியப்பன் புலவர் கூறியபடி செய்தால் பாடலில் கண்ட பலன் கிடைக்காது.

குறிப்பு :- நாதம்-இடி-வெடி நெருங்கிய பேதம் உண்டு. அதுபோல் சாமம்-காதல்-அன்பு நெருங்கிய பேதம் உண்டு. இதனை உள்ளத்து உணர்வாலும், நிதான கவனத்தாலும் அறிய தெள்ளிய நீர் சலசலக்கும் தன்மை போன்ற அறிவு வேண்டும். அப்போது தான் கண்டு உய்த்து உணர்ந்து செயல்படின் தானே முப்பூ தண்டமிட்டு வணங்கி நிற்கும்.

இடி-வெடி, இவைகளில் செய்கையிலும் செயலிலும் நெருங்கிய பேதம் இருப்பதால் உணரமுடிவதில்லை. ஒன்றை யொன்று மோதுவது இடி-இதற்கு உதாரணம் மேகங்கள். ஒன்றிலிருந்து பிரிந்து வியாபித்து ஓசையுடன் சிதறுவது வெடி-இதற்கு உதாரணம் எரிமலை. இரண்டிற்கும் ஒலிக்கும் தன்மையில் மாற்றம் இருப்பதை கூர்ந்து கவனித்தால் தான் புரிந்துக்கொள்ள முடியும்.

ஆதியுப்புக்கு பதில் வெடியுப்பு சேர்த்தால் முப்பூ முடியாது. ஆதியுப்பு என்பது சித்திரை, வைகாசி மாதத்தில் இடியின் காரணமாக மின்னலுடன் மின் இயக்கம் களர்நிலத்தில் பாயும்போது, அங்குள்ள மண் இடியின் மின் இயக்கத்தால் சுண்ணமாகி கோழிமுட்டை போல் கட்டிக்கொள்ளும். இதுவே தான் சித்தர்கள் பரிபாஷையில் ஆதியுப்பு என்று கூறுகிறார்கள். அண்டம் என்றும் கூறுவர். எட்டு மாத கர்ப்பம் என்றும் பெயர். கடலுப்புக்குப் பதில் கடல்நுரை சேர்த்தால் பயன் அளிக்காது கடலுப்புக்கும் கடல்நுரைக்கும் மாற்றங்கள் உண்டும். கடலின் அலைகள் பாறைகளில் மோத மோத நீர்வற்றி உப்பு பாறையில் சேரும். அப்படி சேர்ந்த உப்புக்கு கைப்பு சுவை இருக்கும். இதனை பாறையுப்பு என்றும் பச்சையுப்பு என்றும் கூறுவர். கடல் அலைகளின் இயக்கத்தால் ஆங்காங்கு குமிழ்கள் தோன்றி ஒன்றையொன்று இறுக இறுக நுரையாக வரும் காலத்தில் சூரிய ஒளியால் உறைந்து, அதில் கடல்வாழ் உயிர்கள் வசிக்கும். காலபோக்கில் அதனை எடுத்து வந்து கடைகளில் கடனுரை, கடல் நுரை என்று கூறுவர். அமுரியுப்புக்கு பதில், கடல் நுரை சேர்ப்பின் முப்பு ஆகிவராது. இதன் குண மாற்றம் புரிந்து முப்பு செய்ய முற்படின், முப்பு வணங்கி தன் பீடத்தில் வசமாகும்.

மூலிகை அகராதி!

— முன் மாதத் தொடர்ச்சி

குருவிச்சி

வேறு பெயர்கள் :— குருவிச்சிப் பூண்டு, ஆங்கிலம் : எரிஸியா பக்ஸிபோலியா, மற்ற மொழிகளில் காணக் கிடைக்கவில்லை.

விபரம்

தென்னிந்தியாவுக்கே உரிய குத்துச்செடிப் பூண்டினம். குப்பைமேனியை போன்றது. பெரும்பாலும் மழை, பனி காலங்களில் தன்னிச்சையாக வளரும்.

உபயோக உறுப்பு — சமூலம்

சுவை : துவர்ப்பு. வீரியம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணாதிசயம்

மேகப்பிணி விலக்கி, நட்புழுக்கொல்லி, மலடு நீக்கி.

குருவேர்

வேறு பெயர்கள் :— வெட்டிவேர், இருவேலி, வீரணம், விழல்வேர் ஆங்கிலம் : அன்ரோபோகன் முரிகேடஸ், தெலுங்கு : அருவு நகிட்டே வேரு, மலையாலம் : வெட்டிவேர, கன்னடம் : லாவஞ்சா, சமஸ்கிருதம் : உஷீரா, இந்தி : பாலாஷ்.

விபரம்

இந்தியா முழுவதும் மணற்பாங்கான இடங்களில் வளரக் கூடியது. மஞ்சள் நிறங்கலந்த வெளிர் நிறமான வேர்கட்கு எல்லாம் வெட்டிவேர் என்றும், சதுப்பு நிலங்களில் பயிராகும் வெட்டிவேர் சிறிது கருமை நிறமாகவுமிருக்கும். இதற்கு விளாமிச்ச வேர் என்றும் கூறுவர். குணமும், மணமும் இரண்டிற்கும் ஒன்றே என்பது வழக்கு. வாசனை திரவியங்களில் சேரும் முக்கிய சரக்காக விளங்குகிறது.

உபயோக உறுப்பு — வேர் வேரிலிருந்து இறங்கும் எண்ணெய்

சுவை : இனிப்பு, வீரியம் : சீதம், பிரிவு : இனிப்பு.

குணாதிசயம்

வெப்பமுண்டாக்கி, வெப்பமகற்றி குதவுண்டாக்கி, சிறுநீர் பெருக்கி, வியர்வை பெருக்கி, விசிவகற்றி, உரமாக்கி, மேகப்பிணி விலக்கி.

(தொடரும்)

உ

முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

❁ ❁ ❁

கே: ஐயா, "உள்ளநோய் பிணிகள் தீர்கால் உலகோர் பண்டிதரைத் தேடார்" என்ற பாடல் எந்த நூலில் உள்ளது? அதன முழு பாடலேயும் அன்பு கூர்ந்து வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

ப: அன்பரே! இந்தப் பாடல் "விவேக சிந்தாமணி" என்ற பழைய நூலில் உள்ளது. பாடல்:—

"பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின் சொற்புத்திகேளான்
கன்னியர் குழலால் மூத்தல் கணவனைக் கருதிபாரார்
தெள்ளிய வித்தை கற்றால் சீடனும் குருவைத்தேடான்
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால் உலகோர் பண்டிதரைத்தேடார்"

இந்த காலத்தில் யார் விவேகசிந்தாமணியை கவனிக்கப்போகிறார்கள்.

கே: ஆங்கில மருந்து விளம்பரம் பற்றி நீர் சொல்வது சரியே! ஒரே மருந்தை, பல பெயர்களில் விற்கும் மோசடியை தடை செய்ய அரசாங்கமே முயன்றும் முடியவில்லை. மக்களுக்கு

விழிப்புணர்ச்சி ஏற்பட்டாலொழிய, இதற்கு விமோசனமில்லை! எனக் கருதுகிறேன். எப்படி?

ப: மக்களிடையே தற்போது விழிப்புணர்ச்சி ஏற்பட்டுத் தான் வருகிறது ஆனால் அரசாங்கத்தில் உள்ள மருந்து ஆய்வாளர் தரும் தகவல்களை ஏற்று, "பிப்பால்-சி" போன்ற அபாயம் விளைவிக்கக்கூடிய ஊசிகள், மாத்திரைகளை முதலில் அமைச்சர்கள் அறிக்கை விட்டுத் தடை செய்த பின்பு, — மீண்டும் அத்தகைய மருந்துகள் விற்கலாம் தடையில்லை! என்றும் அறிக்கை விடுவது இரட்டை வேடமணிந்து வரும் "விகடகவி" வார்த்தை போல் இருப்பதால் விழிப்புணர்ச்சி யடையும் மக்களிடையேயும் மீண்டும் 'குழப்பம்' ஏற்பட்டு விடுகிறது. எதை நம்புவது? யாரை நம்புவது? எப்படி நம்புவது? அதனால் தான் எங்கும் இயற்கையாகவே வளரும் பச்சிலைகளை நம்புங்கள்! அதிலும் உணவாகக் கொள்ளும் கீரையினங்களின் மேல் நம்பிக்கை வையுங்கள் என்று எழுதுகிறது மூலிகை மணி.

கே: தேனும் நெய்யும் சம அளவு கலந்து சாப்பிட்டால் உடலுக்கு ஊறும, மரணம் உண்டாகும் என்கிறேன். சில சித்த மருத்துவர்கள, இது முட்டாள்தனம்; அப் டி யாரும் சாக மாட்டார்கள; இது பொய்க் கூற்று என்று கூறி வருகின்றனர். இது பற்றி தாங்கள் விளக்க கோருகிறேன.

ப: அப்படிச் சொன்ன மருத்துவர் சித்த மருத்துவர் ஆக மாட்டார். இதற்கு ஆதாரபூர்வமாக திருக்குறள் பாடலே உள்ளது. இதற்கு உரை எழுதிய பரிமேலழகரும், மனக்குடவரும் நீங்கள் சொன்ன தையே கூறுகிறார்கள். உதாரணம் :-" அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப் பசித்து" மாறுபாடாகது — தேனும் நெய்யும தம்முள் அளவொத்து நஞ்சாதல் போல்வனவுமாம்; அவற்றைக் குறிக்கொள் ளாது உண்ணின் நோயும் மரணமும் வருதலின் "கடைப்பிடித்து" என்றார். — (பரிமேலழகர், மணக்குடவர்)

கே: என் தாயாருக்கு 46 வயதாகிறது இதுவரை எந்தி நோயும் வந்ததில்லை சில நாட்களுக்கு முன், மூக்கின்மேல் சேரிந்த காரணததால் துவரம் பருப்பு அளவில் சுண்டு குண் டாக படைபோல் உண்டாகி உதடுவரை பரவி வந்து விட்டது. கொஞ்சம நமைச்சல் கொடுக்கிறது. இதைப் போக்க எந்த மூலிகையை பயன்படுத்தலாம்?

ப: மூக்கின் மேல் நமைச்சல் உண்டாகி பொரிந்தது சிலவகைப் பூச்சிகளின் எச்சம், சிறு நீர் ஆகியவை பட்டாலும் அப்படி ஆகக் கூடும். எதற்கும் பச்சை அருகம்புல் காலை மாலை 3 நாள் உள்ளுக்கு கொடுத்து, மேலுக்கு குப்பைமேனி, சுண்ணாம்பு அரைத்து பூசிவர குணமாகும். குணமாகவில்லையானால் மருத்துவர் ஆலோசனையை நாடுவதும் நல்லது.

கே: எனது வயது 30 ஆகிறது. ஆறு ஆண்டு காலமாக வலது கரத்தில உட்பகுதியில் எப்பொழுதும் தோள் வரிந்து கொண்டு இருப்பது போல் இருக்கிறது. கரத்தின் மேற்பகுதி தவிர, உடலில் மற்ற பாகங்களில் வியர்வை உண்டாகிறது. வேலை செய்யும்போது இப்படி வியர்க்கும். சும்மா இருக்கும் போது வலது கரம் உட்பகுதியில் மாத்திரம் வியர்வை உண்டாகும். என்ன வியாதி என்பதை விளக்கி அதை போக்க ஒரு வழி கூறவும். சில சமயங்களில், வேலை செய்யும்போது, தொண்டைக் குழியில் வலியும் ஏற்படுகிறது.

ப: இது வாதநோய் சம்பந்தப்பட்டது. எனவே இதற்கு வாரம் 2 முறை வாதநாராயணன் கீரையும், 2 முறை முருங்கை கீரையும், மூன்று முறை அரைக்கீரையும் நெய்விட்டு சாப்பிடவும். இதனால் 2 மாதத்திற்குள் உடல்நிலை சரியாகிவிடும்.

கே: ஐயா, சித்த மருத்துவர்களில் தங்களைப் போன்றும், திரு. பலராமையாவைப் போன்றும் ஒரிருவர் தவிர, மற்றவர்கள் எல்லாம, சுத்த மடையர்கள்; அறிவில்லாதவர்கள், ஒழுக்கம் இல்லாதவர்களாகத்தான் நான் காண்கிறேன். இதனால் தான் இந்த முறை மக்களிடம் கவர்ச்சி பெறவில்லை, வளரவில்லை. மேற்போக்காக ஒன்று சொல்கிறேன். சென்னையில் நாகரீகமுள்ளவர் வசிக்குமிடத்தில் ஒரு சித்த மருத்துவன் இருக்கிறான். தாடி வளர்த்துக் கொண்டு, பீடி பிடிக்கிறான்; இடுப்பில வேட்டி கட்டிக் கொண்டு, மேல துண்டு கூட இன்றி அணைந்த பீடியை எறியாமல் மீண்டும் ஒரு தீக்குச்சியால பற்ற வைக்கிறான். அதே எச்சில் கையால் மருந்து மடிக்கிறான் தருகிறான். இவன் ஒரு பிரபல மருத்துவன் என்று பெரிய பெரிய தனவந்தர்கள் எல்லாம் அவனிடம் வருகிறார்களே! என்று நானும் போய்ப் பார்த்தேன். எச்சில் பீடி பிடித்துக் கொண்டிருந்த அந்த ஆசாமி 'இச்' 'இச்' என்று துப்பிக் கொண்டிருந்தான். புகை மண்டலம் மேலே

எழும்பிக் கொண்டிருந்தது 'சீ' இவனும் சித்த வைத்தியன் என்று பெயர் வைத்துக் கொண்டு மாத்துவம் பார்க்கிறானே! என்று மனம் வெதும்பினேன். எப்படி சித்த மருத்துவத்தை ஆதரிப்பது?

ப: அன்பரே! என் போன்றவர், திரு பலராமய்யா போன்றவர்களுக்கு சித்த மருத்துவம் பற்றி தெரிந்தது ஒரு கையளவு தான்! எங்களைப் பற்றி புகழ்வது வீண். ஆனால் அறிவில்லாதவர்கள், மடையர்கள், ஒழுக்கமில்லாதவர்கள் என்று எழுதினீர்களே! அவர்கள் உலகத்தார் கண்களுக்கு அப்படித்தான் தோன்றுவார்கள். உம் போன்ற மூடர்களின் கண்களுக்கு எப்படித் தெரியும்? "முகத்தில் கண் கொண்டு காண்கிற மூடர்காள்! அகத்தில் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" என்பது சிவவாக்கியம். ஒழுக்கம் என்பது, கோட்டு, சூட்டு காலர், டை அணிந்து உடை மட்டும் சுத்தமாக இருப்பதல்ல! பட்டப் படிப்பு படித்தவர்கள் தான், உம் போன்றவர்களுக்கு அறிவாளிகளாகத் தோற்றமளிப்பார்கள். சித்த மருத்துவம் செய்பவர்களில் பலர் உருவத்தால் பஞ்சை போல் இருப்பார்கள். உருவத்தைக் கண்டு எள்ளி நகையாடுவது சரியல்ல! எச்சில் என்று எழுதினீர்.

எச்சில் எச்சில் என்று நீர் இடைந்திருக்கும் ஏழைகாள்
துச்சில் எச்சில் அல்லவோ தூய காயம் ஆனதும்
வைத்த எச்சில் தேனலோ, வண்டின் எச்சில் பூவலோ
கைச்சுதாவில் வைத்தடன கறந்த பாலும் எச்சிலே. -(சிவவாக்கியர்)

இப்படி எங்கு பார்த்தாலும் எச்சில் இருப்பதைக் காணவில்லையே நீர்! அவரிடம் உள்ள குறைகளைக் காண வேண்டுமென்றே போய் எச்சில் துண்டு பீடியைப் பற்றிக் கூறினீர்! உடன் வந்த பெருந் தனவந்தர்கள் அதே எச்சில் கையால் கொடுத்தால் போதும் என்று மனம் ஒப்பி, மருந்து வாங்கிப் போனார்கள் அல்லவா? 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்ற வள்ளுவர் வாய் மொழிக்கு இணங்க, மெய்ப்பொருள் எது என்பது அனுபவ பூர்வமாக இதயத்தில் உணர்ந்து, பிறகு அளவுடன் பேச வேண்டும். மற்றும் சித்த மருத்துவத்தை மக்கள் வளர்க்கவேண்டிய நிலை இல்லை! நமது பரம்பரை சித்தர் மருத்துவத்தை வளர்க்கவேண்டிய அவசியமும் இல்லை. அது நம் உடலோடு, பழக்க வழக்கத்துடன் ஒட்டிய ஒன்று. இதில் இருந்து பிரிந்த நம் நாட்டவர்கள், அந்நிய நாகரீகத்தில் ஒட்டிக் கொண்டு, உம்மைப் போன்று முகத்தில் கண் கொண்டு பார்க்கின்றனர்; அவ்வளவு தான்! இனியாவது சித்த மருத்துவர்களை எள்ளி நகையாடாதீர்கள்!

கே: என் தம்பிக்கு வயது 10 ஆகிறது. சிறு வயதில் நடக்கக் கூடிய வயதில் தாமதமாக நடக்க ஆரம்பித்தான். கால்கள் நன்றாக உள்ளன விரைந்து எழுந்திருக்கவோ, வேகமாக நடக்கவோ முடிவதில்லை. ஆங்கில முறை சிகிச்சை செய்தும், பயனளிக்கவில்லை. எனவே, தாங்கள் இச்சிறுவனுக்கு சித்த மருத்துவத்தில் பூரண குணம்பெற, ஒரு வழி இதழில் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ப: முதலில் ஆங்கில மருத்துவத்தின் சீர்கேடுகளை அறுவைப்புல் கொண்டு முறிவு செய்து கொள்ள வேண்டும். பிறகு எலும்பு வளர்ச்சிக்கு ஊட்டம் தரக்கூடிய மருந்துகளான மத்து, பழம் போன்ற பற்பங்கள், நெல்லிக்காய் இளகல், ஆகியவைகளை அளவுடன் மருத்துவர் ஆலோசனைக்குப் பின்பு 2 மாதம் கொடுத்து வாருங்கள். உங்கள் தம்பி நோய் விலகி நலம் அடைவான்.

கே: என் முகத்தில் ஊசி குத்துவதற்கும் இடமில்லாத அளவிற்கு முகப்பருக்கள் இருக்கின்றன இவை போகக உங்கள் மூலிகை வைத்தியத்தில் ஒரு வழி கூறவும்?

ப: மஞ்சள் ஒரு துண்டு, அம்மாம்பச்சரிசி ஒரு கைபிடி எடுத்து மைபோல அரைத்து முகத்தில் பூசி, ஒரு மணி கழித்து கழுவி விடவும். இப்படி 20 நாள் தொடர்ந்து செய்து வரவும.

கே: என் வயது 20 ஆகிறது தலை வேகமாக நரைக்க ஆரம்பித்துள்ளது. பயனளிக்கக் கூடியவாறு ஒரு மூலிகை வைத்தியம் கூறவும்?

ப: வெள்ளைப்பூ கரிசலாங்கண்ணியை இடித்து சாறு பிழிந்து, சம அளவு நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி தலை முழுகவும்.

கே: எனக்கு மலச்சிக்கல் இருக்கிறது 8 மாதமான குழந்தையும் உள்ளது. மலச்சிக்கல் போக ஏதாவது நல்ல மருத்துவம் கூற வேண்டுகிறேன.

ப: சுக்கு, பிஞ்சு கடுக்காய் சம அளவு எடுத்து 100 கிராம் இடித்து ஒரு குவளை நீர் விட்டு காய்ச்சி, இரவு படுக்குமுன்பு குடித்து வரவும் மலச்சிக்கல் நீங்கும்.

கே: நான் ஒரு நாளைக்கு 5 பாகிட் சிகரெட் குடிப்பவன். கொஞ்ச நாட்களாக மார்பில் வலி ஏற்படுகிறது. நவீன மருத்துவத்தில் நம்பிக்கை இல்லை மார்பு வலியை போக்க நீங்கள் ஒரு நல்ல வழியைக் கூறுவீர்கள் என நம்புகிறேன். புகை பிடிப்பதை நிறுத்த முடியாதவனாகிவிட்டேன். எவ்வளவோ முயற்சி செய்தும் பயனில்லை. என் நோயை தீர்த்து வைக்கும்படி கோருகிறேன்.

ப: புகைப் பழக்கம் நிறுத்தாத வரையில் உமது மார்பில் உள்ள சளியைக் குறைக்க வழியே இல்லை எனவே புகைப் பழக்கத்தை நிறுத்தி விட்டேன் என்று சொல்லுங்கள். பிறகு நோய் தீர்க்கும் வழியை கூறலாம்.

கே: என் வயது 40 ஆகிறது. எனக்கு 6 மாதத்திற்கு ஒரு முறை 'தடுமம் பிடித்து விடுகிறது. மூக்கு அடைப்பு ஏற்படுகிறது தும்மல் மாறுமல் தொடர்ந்து வரும் பிறகு கெட்டியாக சளி வருகிறது இப்படி 1 வாரம் இருக்கிறது. 15 தினங்களில் குறைந்து சரியாகிவிடும். இதைப் போக்க ஒரு மருத்துவம் கூற வேண்டுகிறேன்.

ப: ஐயா, இது உங்களுக்கு நுரையீரலில் ஈரம், காச நோய் ஆனபடியால், இதற்கு தக்கபடி நோயை பூரணமாகப் போக்கவேணுமானுல், நேரில் வந்து, ஆலோசனை பெறவும். தடுமன், மூக்கடைப்பு, தும்மல் தற்காலிகமாக நிற்க வேண்டுமானுல், அரைக்கீரை. தூதுவளைக் கீரையை துவையல் செய்து தினமும் சாப்பிட்டுவர, உடல் ஈரம் குறைந்து சூடு உண்டாகி உபசாந்தியாக குறையும்.

கே: என் வயது 23 ஆகிறது. திருமணமாகாதவன். இடது கை வலித்து சில நேரங்களில் விரல்கள் நடுங்குகிறது. ஆங்கில மருத்துவத்தில் நரம்புத் தளர்ச்சி என்று கூறி விட்டார்கள். அவர் கொடுத்த மருந்தை சாப்பிட மனமில்லை. எந்த கெட்ட பழக்கமும் டீ, காபி சிகரெட் போன்ற பழக்கமும் இல்லாதவன், இடது கை வலியும், விரல நடுக்கமும் நீங்க தக்கதொரு மூலிகை மருந்து கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ப: பக்க வாதமாக இருக்கும். நற்சஞ்சீவன் இலையை இடித்து சுண்டைக்காய் அளவு காலை மாலை 6 நாள் சாப்பிட்டு பால் குடித்து வரவும். நரம்பு தளர்ச்சி என ஆங்கில மருத்தவர்கள் கூறிவிட்டனர். இது பக்கவாதம நேரில பார்த்து கவனிக்க வேண்டிய விஷயம்.

கே: எனது நண்பர் ஒருவருக்கு, "அமாவாசை வருவதற்கு மூன்று லேயோ, அல்லது மறு தினமோ இரத்தம் கக்குவதைப்போல கனவு கண்டு, காலை யில் எழுந்ததும், உடல் அசதியாகவும், பலமிழந்த மாதிரியுமாக இருப்பதாக கூறுகிறார்' இது மாதாமாதம் தொடர்ந்து 4 வருடங்களாக இருக்கிறது. இதை போக்க என்ன செய்யலாம?

ப: இந்த நோய்க்கு பரிகாரம் தெய்வ உபாசனை தான் நல்ல வழி. குருமுகாந்திரமாக இஷ்ட தெய்வத்தின் மூல மந்திரத்தை உபதேசம் வாங்கிக் கொண்டு உபாசனை செய்ய விலகும்.

கே: என் வயது 19, பி. ஏ. படிக்கிறேன். மெலிந்த உடல் படைத்த வன். சிறு வயது முதல் தொடை, கை, கால், இடுப்பிலும் சிரங்கு வந்து, மருந்து போட்டால் குணமாகி விடும். தற்சமயம் 1 வருட காலமாக இடுப்புக்கு கீழும், முழங்காலுக்கு மேலும், சிரங்குகள் தோன்றி நமைச்சல் எடுக்கிறது. என் ஆண் குறியிலும் தாக்குகிறது. கெட்ட பழக்கத்தில் இதுவரை போன வனில்லை. இதை போக்க ஒரு வழி கூறவும்?

ப: இதற்கு எங்கள் தயாரிப்பு "மாகா மூலிகை எண்ணை" சாப்பிடுவது நல்லது. சந்தாதாரர்தானு? என்று நீங்கள் நெம்பர் குறிந்து அனுப்பினுல், மகா மூலிகை எண்ணை வாங்கி குணமடையலாம். மிகவு குறைவாகவே தயாரிப்பதால் அனைவருக்கும் கிடைக்காது.

கே: எனக்கு பணம், பதவியால் புகழ் தேவையில்லை. சிறந்த வாழ்க்கை துணைவியால் கிடைக்கும் புகழ் தான் சிறந்தது என தோன்றுகிறது. நான் என் குறையை நீக்கிக கொள்ள எந்த கடவுளை வழிபட்டு வரலாம்? தங்கள் அறிவுரை யை கேட்க ஆவல் கொண்டுள்ளேன்.

ப: விநயகரை தினமும் எழுந்தவுடன் துதி செய்து வணங்கிவர உமது நல்ல நினைவுகள் யாவும் கைகூடும. இடுக்கண் வாாது தோல்வி யடையாது காரியங்களை நிறைவேற்ற "பிள்ளையார்" ஒருவர் தான் துணை நிற்பார். மற்ற தெய்வங்களும் துணை நிற்கும். ஆனுல் விக்கி னத்தைப் போக்குபவர் விக்னேஸ்வரர்.

கே: "அழுக்குண்ணி படை" என்ருல் என்ன? அது ஏற்பட காரணம் என்ன? அதை போக்க ஓர் எளிய மூலிகை சிகிச்சை கூறவும். மகா மூலிகை எண்ணை சாப்பிடலாமா? தங்கள் ஆலோசனையை தெரிவிக்கவும்.

ப: இதை அழுகுத் தேமல் என்றும் கூறுவர். தினமும் 10 துளி சீமை அகத்தி இலைச்சாறு சர்க்கரை கலந்து உண்டுவர நீங்கும்.

கே: நான் ஒரு ஆசிரியர். நான் கல்லூரி படித்து வரும்போது, விடுதி சாப்பாட்டினாலும், தூக்கமின்மையாலும் வயிற்று கடுப்பு கண்டு, கஷ்டப்பட்டேன். மாதத்திற்கு மும்முறையாவது வயிற்று கடுப்பு ஏற்படும். ஆங்கில மருத்துவத்தில் சிறிது குணம் கண்டேன். கல்லூரி படிப்பு முடிந்ததும், பல மாதங்களுக்கு பிறகு மீண்டும் மலம் கழிக்கும் போதெல்லாம் ஆட்டின் கழுத்தை அறுத்தால் எப்படி இரத்தம் கொட்டுமோ அவ்விதம் குருதி கொட்டும். தெரியாத்தனமாக கால போக்கில் சரியாகிவிடும் என்று 4 வருடம் இருந்து விட்டேன். எண்ணை ஸ்நானம் செய்யாவிட்டால் கண் எரிச்சல் அதிகமாகிறது. கோழிக்கறி சாப்பிட்டால் மலத்துடன் இரத்தம் கொட்டுகிறது. தயிர் சாதம், கீரைகள் சாப்பிட்டு வருகிறேன். எனக்கு "இரத்த மூலம்" என்ற நோய் கண்டிருக்கிறது என்று உணர்கிறேன். இந்த வேதனையுடன் நான் இனி வாழாமல், உடல் நலம் பெற்று, குணம் காண தங்களை நாடுகின்றேன். தங்கள் அன்பான மருத்துவ ஆலோசனையை வேண்டுகிறேன்.

ப: குப்பைமேனி இலை 4 பச்சை அருகம்புல் 2 கைபிடி, மிளகு 6 இவைகளை அரைத்து, காலை எலுமிச்சம்பழம் அளவு சாப்பிட்டு, பசும் பால் காய்ச்சியது குடிக்கவும். இதில் குணம் தெரியவில்லையானால், நேரில் வருக.

கே: ஐயா, சில மாதங்களாக மூலிகை மணியின் துணை ஆசிரியர் திரு க வெங்கடேசன, M.A., B.Sc, (உங்கள் மூத்த குமாரர்) அவர்கள் பெயரே மூலிகை மணியில் காணோமே! ஏன் அவர் இப்பொழுது எங்கே? என்ன செய்கிறார்?

ப: அன்பரே! எனது மூத்த குமாரனுக்கு கல்லூரி விரியுரையாளராக பணி புரியும் வாய்ப்பு ஏற்பட்டு உள்ளபடியால், அவர் பெயர் சட்டப்படி மூலிகை மணியில் துணையாசிரியராக இடம் பெறுவது தவறு. மேலும், உங்கள் துணையாசிரியர் தற்போது கல்லூரிப் பேராசிரியராகப் போகும் வாய்ப்பும் உண்டாகப்போகிறது. அதுமட்டுமல்ல! அவனுக்கு சனவரித் திங்களில் ஒரு பட்டதாரிப் பெண்ணையும் மணமுடிக்க உறுதி செய்துள்ளேன். திருத்தணிகை முருகப் பெருமான் சந்நிதியில் நிகழும் இந்த திருமண விழாவில் உங்களைப் போன்ற அன்பர்கள் அனைவரும் வந்து கண்டு களித்து ஆசி கூறவும் வேண்டும். திருமண நாள் அடுத்த இதழில் வெளியாகும்.

O O O